# இராசரட்டை நாகரிகத்தின் பின்னரான காலப்பகுதி



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

தேர்ச்சி :- **இலங்கையின் நாகரிகங்களது வரலாற்று ரீதியிலான பரவல் மற்றும் வளர்ச்சிப் போக்குகள் என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார்.**

## 2ம் பராக்கிரமபாகு

இடப்பெயர்வு இராசதானி காலத்தின் வரலாற்றிலே மிகுந்த முக்கியத்தவம் பெறுகின்ற மன்னனாக விளங்குபவன். தம்பதெனியாவில் அரச வம்சத்தில் வந்த 2ம் பராக்கிரமபாகு ஆவான். இவன் தம்பதெனியாவை உறுதியான இராசதானியாக மாற்றியதோடு கி.பி 1236 – 1370 வரையான காலப்பகுதியில் ஆட்சி புரிந்தான். இவனது ஆட்சி பற்றி அறிவதற்கு சூளவம்சம் (மகாவம்சத்தின் 2ம் பாகம்) , பூஜாவலிய , தம்பதெனிய அஸ்ன , கந்தவுறு சிரித போன்ற இலக்கியங்களும் தொல் பொருட்களும் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. அந்த வகையிலே அரசியல் , பொருளாதார , கலாசார அடிப்படையில் மிகவும் உறுதி வாய்ந்த ஆட்சியொன்றை உருவாக்கிய ஒருவனாகவும் , விடுதலை வீரனாகவும் , சுதந்திர வீரனாகவும் மிகச் சிறந்த ஒரு தலைவனாகவும் விளங்கினான். 3ம் விஜயபாகுவின் மகனான இவன் நீண்ட காலமாக நிலவி வந்த அரசியல் குழப்பங்களைக் கட்டுப்படுத்தி இலங்கையில் பரந்த ஆட்சியை உறுதிப்படுத்தினான்.

3ம் விஜயபாகுவின் மரணத்தைத் தொடர்ந்து அரசைப் பெற்ற இவனது முக்கிய நோக்கமாக இருந்தது இராசரட்டையில் ஆட்சியை நடாத்தி வந்த மாகனை முறியடித்து அப்பகுதியையும் தனது ஆணையின் கீழ் கொண்டு வருவதேயாகும். முதலில் உள்நாட்டுக் குழப்பங்களைக் கட்டுப்படுத்தியதோடு வன்னிய சிற்றரசர்கள் குழப்பத்தை ஏற்படுத்திய போது அக்குழப்பத்தைக் கட்டுப்படுத்தி தம்பதெனியாவின் அயலப் பிரதேசங்களை இணைத்து பலம் வாய்ந்த இராசதானியாக உருவாக்கினான். உருகுணை , மாயரட்டை , தக்கணதேசம் முதலான பல பகுதிகளில் தனது ஆட்சியை நிலைப்படுத்தினான். இராஜரட்டை மற்றும் வட பகுதிகளில் கலிங்க மாகனின் படைகள் நின்றதால் அவற்றை வெளியேற்றும் நோக்கோடு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தான். “ இலங்கை என்ற மடந்தையை என்னுடையதாக்குவேன்” என அவன் உறுதி பூண்டதாகவும் , துட்ட காமினி , 1ம் விஜயபாகு போன்ற விடுதலை வீரர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவன் செல்ல எண்ணியதாகவும் காலவேடுகள் குறிப்பிடுகின்றன.

தொகுப்பு : திரு.த.சுரேன், வரலாறு, (ஆசிரியர்) (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார் , ஆசிரியர் (த.தொ.தொ.) (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மாகனிடம் இருந்து நாட்டை விடுவிக்க மன்னன் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் போது தென்கிழக்கு ஆசியாவில் தாமிரலிங்க தேசத்திலிருந்து வந்த சந்திர பாணு என்பவன் 2ம் பராக்கிரம பாகுவின் 11ம் ஆட்சியாண்டான கி.பி 1247 இல் புத்தரின் அற்புத சிலையொன்றைக் கவர்ந்து செல்வதற்காக ஆக்கிரமித்து வந்தான். அவனது மருமகனான வீரபாகு இப்படையை எதிர்கொண்டு கடும் சமரின் பின் புறங்கண்டதாகவும் கூறப்படுகின்றது. தென்மேற்குக் கரைகளிலே வந்து இறங்கியதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஆதாரமாக வீரபாகு இவர்களினுடைய சண்டையின் போது வெற்றி பெற்று தேவுந்தருக்குச் சென்றதாகக் கூறப்படுவதைக் குறிப்பிடலாம். சந்திரபானு தனது முதல் படையெடுப்பில் தோல்வியடைந்த போதும் அவன் வட இலங்கைக்குச் சென்று தனது ஆதிக்கத்தை நிலை நாட்டி இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்படுகின்றது. சான்றாக யாழ்ப்பாணக் குடா நாட்டில் காணப்படும் சாவகச்சேரி சாவகன் கோட்டை மற்றும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தெற்கே காணப்படும் ஜாவக் கோட்டை எனும் பெயர்கள் அக்காலம் முதலாகப் பயன்படுத்தப்பட்டு வருவதைக் குறிப்பிடலாம். இவ்வாறு சந்திர பானுவின் அரசியல் ரீதியான முதலாவது படையெடுப்பை வெற்றி கொண்டவை இவனது அரசியல் ரீதியான வெற்றியை எடுத்துக் காட்டுகின்றது.

சந்திரபானுவைத் தோற்கடித்த பின்னர் அமைதியான அரசியல் நிலையை உருவாக்க பராக்கிரமபாகு அரும்பாடுபட்டான். ஆனாலும் பாண்டிய அரசனான ஜடாவர்மன் , சுந்தரபாண்டியன் இலங்கை மீது படையெடுத்து வந்தான். இவனது படையெடுப்பும் மிகவும் பலம் வாய்ந்த படையெடுப்பாக விளங்கியது. அவ்வேளை பாண்டியப் படைகளைப் பொலநறுவைக்கு அப்பால் மறித்துப் பெரும் தாக்குதல் ஒன்றை நடாத்தினான். அத்தாக்குதல் மூலம் பாண்டியப் படைகளை வெற்றி கொண்டு பாண்டியர் ஆதிக்கத்தில் இருந்து நாட்டைக் காப்பாற்றினான். இதன் மூலம் கலிங்கர் ஜாவா தேசத்தவர் பாண்டியர் முதலானவர்களிடம் இருந்து நாட்டைப் பாதுகாத்த பெருமைக்குரியவனாக பராக்கிரமபாகு குறிப்பிடப்படுகின்றான்.

தொகுப்பு : திரு.த.சுரேன், வரலாறு, (ஆசிரியர்) (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார் , ஆசிரியர் (த.தொ.தொ.) (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

இவை தவிர பராக்கிரமபாகுவின் காலத்திலே மாகனது ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமை . ஒரு சிறப்பான பணியாகும். பொலநறுவை உள்ளிட்ட பல பகுதிகளில் நிலை கொண்டிருந்த மாகனது படை-களை வெளியேற்றுவதற்காக படை சேர்த்துப் பயிற்சியளித்து தன்னை வலுப்படுத்திக் கொண்டான். 1255ம் ஆண்டு தனது படைகளுடன் முன்னேறிச் சென்ற 2ம் பராக்கிரமபாகுவிற்கு பாண்டியர்களும் உதவியதாகக் குறிப்பிடப்படுகின்றது. இத்தகைய படை உதவிகளைப் பெற்று திட்டமிட்ட வகையில் தாக்குதலை மேற்கொள்ள தயாரானான். மன்னர் தனது படையினர் மூலம் கிழக்காகவும் , மேற்காகவும் பொலனறுவையைச் சுற்றி வளைத்துத் தாக்கினான். இத் தாக்குதலினால் மாகனின் படை தோல்வியடைந்தது. மாகனிடம் இருந்த இராசரட்டையைக் கைப்பற்றிமை இவன் அடைந்த மாபெரும் வெற்றியாகும்.

இவை தவிர முன்னர் தோல்வியடைந்த சந்திரபாணு இந்தியாவிலிருந்து கூலிப்படையொன்றுடன் கி.பி 1261ம் ஆண்டு மீண்டும் இலங்கை மீது படையெடுத்து வந்தான். இதன் போது யாப்பகூவாவில் விஜயபாகுவும் அவனது சகோதரனான வீரபாகுவும் இருந்துள்ளனர் , எனவும் சிங்கள ஆதாரங்கள் கூறுகின்றன. பாரிய படையுடன் வந்து தம்பதெனியாவை முற்றுகையிட்ட சந்திரபாணு புதிய தந்ததாது மற்றும் பாத்திர தாதுகளுடன் ஆட்சியையும் ஒப்படைக்குமாறு அரசனை அச்சுறுதினான். எனவே இரண்டு படையினரிடையேயும் பாரிய யுத்தமொன்று மீண்டும் நடைபெற்றது. இச் சண்டையின் போது பராக்கிரமபாகுவின் அமைச்சனொருவன் பாண்டியரிடம் உதவி பெறச் சென்றதாகவும் பாண்டியரது படை உதவியைப் பெற்று சந்திர பாணுவின் படைகளைத் தோற்கடித்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. 2ம் பராக்கிரமபாகுவால் சந்திரபாணு தோற்கடிக்கப்பட்ட பின்னர் பொலனறுவைக்குச் சென்று அங்கு மீண்டும் பட்டாபிசேகம் நடாத்தினான். எனினும் பொலனறுவையில் அதிக காலம் மன்னன் தங்கியிருக்காததுடன் தனது மருமகனான வீரபாகுவிற்கு பொலநறுவையைப் பொறுப்பளித்து தம்பதெனியாவுக்கு திரும்பியதாக சான்றுகள் குறிப்பிடுகின்றன

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

இவ்வாறாக அரசியல் ரீதியாக சிறப்பான பணிகளை ஆற்றிய இம்மன்னன் தம்பதெனியாவை எழுச்சியடையச் செய்யும் பொருட்டு பல்வேறு பணிகளை ஆற்றினார். அவ் வகையில் இம் மன்னனால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் ஒவ்வொன்றுக்கும் தேவபதிராஜ என்னும் அமைச்சன் உதவியதாக குறிப்பிடப்படுகின்றது. இவ் அமைச்சின் உதவியுடன் இவன் ஆற்றிய சமயப் பணிகளை நோக்கில் பெலிகலையில் இருந்த தந்த தாதுவை எடுத்து வந்த தம்பதெனியாவில் தலதாமாளிகை கட்டி அதில் பிரதிஷ்டை செய்ததுடன் பூஜை வழிபாடுகள் செய்வித்தமை , உபசம்பதா சடங்குகளை நடாத்தியமை. குறிப்பாக பூஜாவலியவில் இவனது 3ம் , 6ம் , 11ம் , 12ம் , 17 ம் , 21ம் , 27 ம் , 30ம் ஆட்சியாண்டுகளில் உபசம்பதா சடங்கினை நடாத்தியதாக குறிப்பிடுகின்றது. சான்றாக மகாவலி கங்கையின் சஹுச தீர்த்தத்தில் (தாஸ் கொட்ட) உபசம்பதா வைபவம் நடாத்தியதாக கூறப்படுகின்றது. மேலும் திம்புலாகர மேதங்கர தேரர் போன்ற பிக்குகளின் தலைமையில் சாசனத்தை புனர் நிர்மானம் செய்து பிக்குகளது ஒழுக்ககரமான வாழ்விற்கு தேவையான சட்ட திட்டங்களை உருவாக்கிய வகையில் தம்பதெனியா , கதிகாவத்தையை வெளியிட்டமை என்பன குறிப்பிடத்தக்கன.

இவை தவிர பாராக்கிரமபாகு தனது சில நடவடிக்கைகளை தனது மகனான விஜயபாகு இளவரசனது மேற்பார்வையின் கீழேயே மேற்கொண்டதாக தெரிய வருகின்றது. குறிப்பாக அனுராதபுரத்திலுள்ள ருவன்வெலிசாய உட்பட்ட விகாரைகளை புனர்நிர்மானம் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பராக்கிரமபாகு தாமிரலிங்க தேசத்திலிருந்து தர்ம கீர்த்தி தேரர் தலைமையிலான பிக்குகளை வரவழைத்து அவர்களுடைய வழிகாட்டுதலுக்கமைய வனவாசம் செய்யும் பிக்குகள் பரம்பரையை உருவாக்கினார். மேலும் களனி விகாரை , பென்தொட விகாரை , கலப்பாத விகாரை , பெலிகல விகாரை , வாகிரிகல விகாரை மற்றும் உபுலவன் தேவாலயம் என்பவற்றை புனர்நிர்மானம் செய்தான். அத்துடன் இரத்தின புரியில் மஹசமன் தேவாலயத்தை கட்டுவித்தான். வருடாந்தம் “ கதீன” எனப்படும் பௌத்த பூஜையை நடத்தியதோடு பெரஹரா என்பவற்றை நடத்த அனுசரணை வழங்கினான். அது மட்டுமன்றி மாகனால் கைப்பற்றப்பட்ட விகாரைச் சொத்துக்களை மீளவும் அந்தந்த விகாரைகளுக்கே திரும்ப வழங்கினான். இவ்வாறாக தம்பதெனியாவை எழுச்சியடையச் செய்வதற்காக பல சமயப் பணிகளை ஆற்றியமை குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு : திரு.த.சுரேன், வரலாறு, (ஆசிரியர்) (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார் , ஆசிரியர் (த.தொ.தொ.) (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சமயப் பணிகளை ஆற்றியது மட்டுமல்லாது சிறந்த இலக்கியப்பணியையும் ஆற்றியுள்ளான். பாளி , சமஸ்கிருதம் , தமிழ் , சிங்களம் போன்ற பல்துறை மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த இவன் சிறந்த கல்வி மானாகவும் , கவிஞனாகவும் காணப்படுன்றான். இதனாலேயே இவன் “ கலிகால சாஹித்ய சர்வக்ஞ பண்டிதன்” எனப் போற்றப்படுகின்றான். சிறந்த இலக்கிய மேதையாகக் குறிப்பிடப்படும் இவன் தம்பதெனியாவில் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக பல பிரிவெனாக்களை உருவாக்கினார். குறிப்பாக நந்தன பிரிவெனா , பலாபத்தல , வகிரிகல , விஜயசுந்தரா ராமய போன்ற பிரிவெனாக்கள் குறிப்பிடத்தக்கன. சிறந்த பண்டிதனாகத் திகழ்ந்த இவன் சில நூல்களை எழுதியுள்ளான். குறிப்பாக கவிசிலுமின , விசுத்திமார்க்க சன்யை , வன விகாரை சன்யை என்பன குறிப்பிடத்தக்கன.

மேலும் இம்மன்னன் வெளிநாடுகளிலிருந்து திரிபீடகத்தில் புலமை பெற்ற பிக்குகளை அழைத்து வந்து பாளி இலக்கியங்களது வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுத்தான். குறிப்பாக தர்மசேனதேரர் , புத்தபுத்திரதேரர் என்போர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களால் பாளி , சிங்கள , சமஸ்கிருத மொழிகளில் பல்வேறு நூல்கள் தோற்றம் பெற்றன. சான்றாக தர்மசேன தேரர் சுந்தரமாரத்னாவலிய புத்த புத்திர தேரர் எழுதிய பூஜாவலிய , வெதஹதேரரின் ரஹவாஹஜனி என்பன குறிப்பிடத்தக்கன. ஒரு சில சோதிட நூல்களும் சிதத் சங்கராவ என்ற பிரசித்தி பெற்ற இலக்கண நூலும் இவனது காலத்தவையாகும்

எனவே மேற்கூறப்பட்ட விடயங்களைத் தொகுத்து நோக்கும் போது தம்பதெனியா இராசதானிக்கால மன்னர்களுள் மிகவும் சிறப்பான ஒரு மன்னனாகக் குறிப்பிடப்படும் இவன் அந்நியராட்சியில் இருந்த நாட்டை விடுவித்த பல்துறை சார்ந்த ரீதியில் தம்பதெனியாவை எழுச்சிடையச் செய்த வகையில் இலங்கை வரலாற்றில் தனக்கென ஓரிடத்தைப் பெற்றக் கொண்டான்.

தொகுப்பு : திரு.த.சுரேன், வரலாறு, (ஆசிரியர்) (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார் , ஆசிரியர் (த.தொ.தொ.) (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk